பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம் நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : ஆவணி 27 (11—9—68) புதன் ✦ வெளியூர் : ஆவணி 28 (12—9—68) வியாழன் [இதழ் : 75

அரிசி உபரியாகிறது ஜப்பானில்!

டோக்கியோ. செப் 11—

"விற்பனைக்காக அல்லது வளர்ச்சியடைந்துவருகின்ற நாடுகளுக்கு உதவியாக அரிசியை ஏற்றுமதி செய்வது பற்றி ஜப்பான் பரிசிலனை செய்ய வேண்டியிருக்கும்"

என்று, ஜப்பான் விவசாயத் துறை அமைச்சர் கூறியிருக்கிறார்.

"ஜப்பானில் அரிசி குவிந்திருக்கிறது ; உணவுக் கட்டுப்பாடு முறையைத் தளர்த்துவதுபற்றி அரசு பரிசிலனை செய்யவேண்டிய கட்டம் நெருங்கிவிட்டது" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நியூயார்க் நகரில் அறிஞர் அண்ணா

பம்பாயில் மாராட்டிர முதல்வர் வழியனுப்பினர்

உருக்கமிகு உள்ளம் நெகிழும் காட்சிகள்

நியூயார்க், செப். 11—

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், இன்று மாலை 3-30 மணியளவில் நலமே நியூயார்க் நகரம் வந்தடைந்தார்.

நேற்று பிற்பகல் 2-30 மணியளவில் சென்னையிலிருந்து புறப்பட்ட அறிஞர் அண்ணா அவர்கள் பம்பாய் சாந்தா குரூஸ் விமான நிலையத்திற்கு 4-30 மணியளவில் நலமுடன் வந்து சேர்ந்தார் ; விமான நிலையத்திலுள்ள முக்கிய பிரமுகர்கள் தங்கும் அறையில் ஓய்வு எடுத்துக்கொண்டார்.

அண்ணா அவர்கள் பம்பாய் வருவது அறிந்து மராட்டிய அரசு மருத்துவ நிபுணர்களை விமான நிலையத்திற்கு அனுப்பியிருந்தது.

அந்த மருத்துவ நிபுணர்கள் அண்ணா அவர்கள் வந்ததும் தமிழகத்திலிருந்து வந்த மருத்துவ நிபுணருடன் சேர்ந்து அண்ணா அவர்களின் உடல் நிலையைப் பரிசோதித்தனர்.

பரிசோதனைக்குப் பிறகு அவர்கள் அளித்த சிகிச்சையினால் அண்ணா அவர்கள் களைப்பு நீங்கி உற்சாகமாக இருந்தார்.

இரவு 7-மணியளவில் மராட்டிய முதலமைச்சர் திரு. வி. பி. நாயக் விமான நிலையம் வந்து சேர்ந்தார் ; அவருடன் அவரது துணைவியாரும் வந்திருந்தார்.

அண்ணா அவர்களைச் சந்தித்து அவரது உடல்நலம் பற்றி வி. பி. நாயக் அவர்கள் விசாரித்தார் ; ஏழரை மணிவரை அண்ணா அவர்களுடன் நாயக் உரையாடிக் கொண்டிருந்தார்.

அண்ணா அவர்களிடம், திரு. நாயக் அவர்கள், 'அமெரிக்காவிலிருந்து தாங்கள் நலமுடன் திரும்பி வரவேண்டும் ; அப்படித் திரும்பி வரும்போது பம்பாயில் தங்க வேண்டும் ; ஒரு நாள் எனது விருந்தினராகத் தங்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார் ; அண்ணா அவர்களும் வி. பி. நாயக் அவர்களின் அன்பழைப்பை ஏற்றுக் கொண்டார் ; பின்னர் வி. பி. நாயக் அவர்கள், அண்ணாவிடம் விடை பெற்றுச் சென்றார்.

ஓய்வு எடுத்துக்கொண்டிருந்த அண்ணா அவர்களை பம்பாய்க் கழகத் தோழர்கள் வந்து சந்தித்தனர் ; அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், சத்தியவாணிமுத்து ஆகியோரும், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, இரா. செழியன், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., கி. மனோகரன், அரங்கண்ணல், தெய்வீகன், ஆகியோரும் அண்ணா அவர்களுடன் இருந்தனர்.

இரவு 1-மணியளவில் பம்பாயிலிருந்து அண்ணா அவர்கள் விமானம் மூலம் அமெரிக்காவுக்குப் பயணமானார்கள்.

அவருடன் அண்ணியார், பரிமளம், இரா. செழியன், இராசாராம், டாக்டர் சதாசிவம் ஆகியோர் புறப்பட்டுச் சென்றனர்.

திரும்பினர்

சென்னை, செப். 11—

அண்ணா அவர்களை வழியனுப்பச் சென்றிருந்த அமைச்சர்கள் இரா, நெடுஞ்செழியன், கருணாநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எம். ஜி. ஆர்., அரசு வழக்குரைஞர் நாராயணசாமி முதலியார் ஆகியோர் இன்று பம்பாயிலிருந்து சென்னை திரும்பினர்,

விமானத்தில் தனி வசதி

காரவெல் விமானத்தில் அண்ணா அவர்கள் வசதியாகப் பயணம் செய்யும் பொருட்டு தனி வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

இதேபோல், பம்பாயிலிருந்து அவர் செல்லும் விமானத்திலும் தனி வசதிகளோடு படுக்கையுடன்கூடிய முதல்வகுப்பு அறை ஒதுக்கப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சர்கள் வாழ்த்து

அறிஞர் அண்ணா அவர்கள், 'விரைவில் நலமடைய வேண்டும்' என்று மத்திய உள்துறை அமைச்சர் சவான், கல்வியமைச்சர் திரிகுண சென், முன்னாள் மத்திய அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர் ஆகியோர் விழைவு தெரிவித்து செய்தி அனுப்பியுள்ளனர்.

அமெரிக்கத் தூதர் வாழ்த்து

புதுடில்லியிலுள்ள அமெரிக்க நாட்டுத் தூதுவர் செஸ்டர் பௌலஸ், அண்ணா அவர்கட்கு அனுப்பியுள்ள செய்தியில் தெரிவித்திருப்பதாவது :—

"நானும் எனது மனைவியும், மற்றும் பல நண்பர்களும், அமெரிக்காவுக்குச் சிகிச்சைக்குச் செல்லும் தங்களுக்கு நல்வாழ்த்துத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இராஜாஜி விழைவு

"தாங்கள் அமெரிக்காவில் பூரண குணமடைகிறவரை தங்கியிருந்து முழுநலத்துடன் திரும்பி வாருங்கள் ; அவசரப்பட்டுத் தாயகம் திரும்பவேண்டும் என்று கருத வேண்டாம்"

என்று திரு. இராஜாஜி அவர்கள், திரு. எஸ். எஸ். மாரிசாமி மூலம் அண்ணாவுக்கு அனுப்பியுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

நலமுடன் திரும்ப நாடு நல்விழைவு

வரவேற்று மகிழ வாழ்த்தி யனுப்பினர் மக்கள்

அரசினர் பொது மருத்துவமனை ! நாட்டின் தலைக்குடிமகன், அப்போதுதான் நலம் விசாரித்துவிட்டுத் திரும்பியிருக்கிறார் !

நான்கு கோடிக்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் கவனம் நான்கு சுவர்களுக்குள் உடல் நலிவுற்றிருக்கும் ஒரு தலைவரையே எண்ணியபடி இருந்தது !

அவனி அறிந்த அறிஞர் உடற்சிகிச்சைக்காகச் செல்லும் பயணம் வெற்றியுடன் அமைய உலகெங்கிலுமிருந்தும் நல்விழைவுச் செய்திகள் வந்தபடி இருந்தன !

கண்மணியாம் அண்ணாவின் இன்னல் கேட்டு இதயம் கசிய கழகத் தோழர்கள் இருமருங்கிலும் காத்து நிற்கின்றனர் !

இருந்தது ஒரே வழிதான் -- அது சென்றதும் அண்ணா அவர்களின் அறையை நோக்கித்தான் !

அதோ -- மருத்துவர்கள் அளவளாவுகிறார்கள் ; உடன் அமைச்சர்கள் சூழ புன்முறுவல் பூத்தபடி அமர்ந்திருக்கிறார் அண்ணா !

உடன் இருப்பவர்கள் அண்ணாவுக்குத் தைரியம் சொல்கிறார்களா அல்லது அண்ணா அவர்களுக்கு ஆறுதல் சொல்கிறாரா என்று புரியவில்லை -- அத்துணை முகமலர்ச்சியுடன் இருக்கிறார் அண்ணா !

விமான நிலையம் புறப்பட அறையிலிருந்தபடி ஆயத்தமாகிறார் ; அந்த நேரத்திலும்காங்கிரசைச் சேர்ந்த இருவர் காண வருகின்றனர் ; கரங்களைப் பற்றியபடி திரு. கருத்திருமன், அண்ணாவுக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார் ! அருகே திரு. ஈ வெ. கி. சம்பத் அவர்கள், அமரவும் மனம் இல்லாமல் -- ஏதும் பேசவும் முடியாமல் நின்றபடி இருக்கிறார் !

நடுப்பகல் கழிந்து நாற்பத்தேழு நிமிடங்களாகின்றன ; நகரும் நாற்காலியில் அமர்ந்தவண்ணம் அண்ணா புறப்படுகிறார் !

இதற்குள்ளாக, சாரளங்கள் -- வழிநிலைகள் -- மாடிப் படிகள் அனைத்திலும் விழிகள் மொய்க்கின்றன !

நடக்க முடியாதவர் -- பேச இயலாதவர் -- பார்வை இல்லாதவர் -- காது கேட்காதவர் -- உடல்நலம் குன்றியோர் -- இவர்களுக்கெல்லாம் வாழ்வளிக்கும் மருத்துவர்கள் -- நாளைய மருத்துவர்களாகவிருக்கும் இன்றைய மாணவர்கள், மாணவிகள் -- ஆகிய அனைவரும், ஆங்காங்கு கிடைத்த இடத்தில் கூடிநின்று, வழிமேல் விழி வைத்து நின்றவண்ணமிருக்கின்றனர் !

மருத்துவர்கள் கேட்டுக்கொண்டும் கண் திறந்து பார்க்க இயலாதவர்கள், இமை கொட்டாமல அண்ணாவைப் பார்க்கக் காத்திருக்கின்றனர் !

படுக்கையில் இப்பக்கம் அப்பக்கம் அசைய முடியாதவர்கள், மாடிகள் பல கடந்து -- அண்ணா செல்லும் வழியில் வந்து நிற்கின்றனர் !

உற்றார் உறவினர் உதவியுடன் கை -- கால் ஊனமுற்றோரும் விரைந்து வந்து -- வண்டிகளில் அமர்ந்தபடி அண்ணாவைக் காண்பதற்குத் தயாராகின்றனர் !

அண்ணா வருகிறார் -- அதே புன்முறுவலுடன் !

'பாதையில் இருக்கும் சிறு உயிரினங்களுக்கும் ஊறு நேர்ந்துவிடக் கூடாதே' என, மயில் இறகினால் துப்புரவு செய்தவண்ணம் நடந்து செல்லும் ஒரு சமயத்தாரைக் கண்டிருக்கிறீர்களா ?

'நெஞ்சம் நெக்குருக இருமருங்கிலும் நிற்கும் தம்பிகளின் -- தலைவர்களின் -- தமிழர்களின் இதயம் வருந்தக்கூடாதே' என்ற ஒரே நோக்கத்துக்காக அண்ணா அவர்கள், தமது உடல் நலிவையும் மறந்து, புன்னகை பூத்தவண்ணம் -- கைகளை அசைத்தவண்ணம் -- கரங்களைக் கூப்பியபடி காரை நோக்கி வருகிறார் !

மருத்துவமனைக்கு வெளியே -- பாதையின் பக்கமெல்லாம் -- அதையும்விட உருக்கமிக்க காட்சி !

இதயங்கள், அலை மோதியபடி நிற்பதுதான் தெரிகிறது -- மனித உருவங்கள் அல்ல !

இமைகள் நீர்மல்க இருப்பதுதான் புரிகிறது -- தோழர்கள் அல்லர் !

மருத்துவமனையிலிருந்து ஒரே பாதைதான் தெரிகிறது ; அவின்யூ சாலைவரையில் -- அதன் இருபுறமும் மக்கள் அணிவகுத்து நிற்கின்றனர் !

அண்ணாவின் கார், 'தாயகம்' சென்றடைகிறது ; அங்கே அன்னையின் ஆசியைப் பெறுகிறார் ; வீட்டின் சுற்றுச் சுவர் மீதெல்லாம் நிரம்பி நிற்கும் தோழர்கள் -- தம்மைக் கண்டு செல்லும் வகையில் -- நாற்பது நிமிட நேரம் கூடத்தில் அமருகிறார் !

அரசியல் -- மொழி -- நாடு ஆகியவைகளையெல்லாம் கடந்து எத்தனையோ கோடிக்கணக்கான நெஞ்சங்களின் இதயக் காவலில் இருக்கும் அண்ணாவின் பாதுகாப்புக்கெனத் தாம் கொண்டுவந்த 'தாயத்து' ஒன்றினை நேரில் தர முடியாதபடி கூட்டம் இருந்ததால், கொடுத்தனுப்பிவிட்டு மனச்சாந்தி பெறுகிறார் ஒரு 'மௌல்வி' !

மீனம்பாக்கத்தில் விமானம் வந்துவிட்டது ; அண்ணா தம் இல்லத்தினின்றும் மீனம்பாக்கம் விமான நிலையம் நோக்கிப் புறப்படுகிறார் !

ஜெமினி சதுக்கத்திலிருந்து மீண்டும் இதயங்களின் வரிசை !

ஆடவர் -- பெண்டிர் -- மாணவர் -- சிறுவர் -- உழைப்போர் -- தொழிலாளர் ஆகிய அத்தனைப் பேரும் பாதையில் மட்டும் பார்வையைப் பதித்து அண்ணாவின் கார் வருகைக்குக் காத்திருக்கின்றனர் !

'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என, ஆயிரமாயிரம் முறை அண்ணா அவர்கள சொல்லியிருக்கிறார் ; எனினும், அவருக்கு வந்துற்ற இந்த உடல்நலக் குறைவினைத் தம்பிகளால் -- தோழர்களால் --

(4-ம் பக்கம் பார்க்க)

'தனி மாநிலம் இல்லையேல் அமைதி இல்லை'

ஷில்லாங் வீதிகளில் மலைவாசிகள் முழக்கம்

அனைத்துக் கட்சி மலைவாசிகள் வேலைநிறுத்தப் போராட்டம்

ஷில்லாங், செப். 9—

அசாம் மாநில தலைநகரான ஷில்லாங் நகரில் இன்று காலையிலிருந்து இயல்பான நிலைமை குலைந்துவிட்டது.

"காலை ஐந்து மணிமுதல் 10 மணி நேரத்துக்குப் பொது வேலை நிறுத்தம் செய்ய வேண்டும்" என்று அனைத்துக் கட்சி மலைத் தலைவர்கள் மாநாடு விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இன்று வேலை நிறுத்தம் செய்யப்பட்டது.

அசாம் சீரமைப்புச் சம்பந்தமாக மலைப் பகுதித் தலைவர்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற மத்திய அரசு தவறியதை எதிர்த்தே வேலை நிறுத்தம் செய்யப்பட்டது.

பொழுது விடிந்தவுடன் நகரின் பல பகுதிகளிலும் 'மலை சாதியினர் தமது தம்பட்டங்களைக் கொட்டி முழக்கி, தொண்டர்களை மறியலுக்கு அழைத்தனர்; ஐந்து மணிக்கெல்லாம் எல்லாத் தொண்டர்களும் தத்தம் இடங்களுக்கு வந்துவிட்டனர். ஐம்பது தெருச் சந்திகளில் தொண்டர்கள் நின்று கொண்டிருந்தார்கள்; இதனால் தெருக்களில் நடமாட்டம் அடியோடு நின்று விட்டது. பால்காரர்களும், இன்றியமையா ஊழியர்களும் மட்டும் காலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஷில்லாங் நகரின் மக்கட்தொகை ஒன்றரை இலட்சமாகும்.

மாநில அரசுத் தலைமைச் செயலகம் உட்பட நகரில் உள்ள எல்லா அலுவலகங்களும் 'வெறிச்'சென்றிருந்தன.

கடைகள், அங்காடிகள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், திரையரங்குகள் யாவும் மூடப்பட்டிருந்தன.

தெருக்களில் ஆள் நடமாட்டம் இல்லை.

அரசுப் போக்குவரத்து பஸ்களும், வாடகை மோட்டார்களும், தனியார் கார்களுங்கூட ஓடவில்லை.

அரசு அலுவலகங்களுக்குப் போகும் வழிகளிலெல்லாம் தொண்டர்கள் மறியல் செய்து கொண்டிருந்தார்கள்; 'மலை மாநிலம் இல்லையென்றால், அமைதி இராது' என்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

நகரில் பலத்த ஆயுதப் போலீசுப் பாதுகாப்புச் செய்யப்பட்டிருந்தது.

தொண்டர்களின் மறியலைப் பொருட்படுத்தாமல் சட்டமன்றக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. அங்குதான் போலீசுக் காவலும் பலமாக இருந்தது. அமைச்சர்களும், உறுப்பினர்களும் நேற்று இரவெல்லாம் சட்டமன்றத்திற்கு அருகிலுள்ள தங்கள் விடுதியிலேயே தங்கியிருந்தார்கள்.

நேரம் முன்னதாக இந்த நடவடிக்கை துவங்கிற்று.

தொண்டர்கள் பலர், அலுவலகம் வாயிலுக்குள் நுழைந்தனர்; அவர்களில் 100 பேர் முக்கிய வாசலுக்கு முன்பு உட்கார்ந்து மறியல் செய்தனர்; அவர்கள் நான்கு வரிசைகளாக உட்கார்ந்துகொண்டனர்.

தொண்டர்கள் வந்து எல்லா வழிகளையும் பிடித்துக்கொண்டனர். தலைமைச் செயலகக் கட்டிடம் காலியாக இருந்தது. நண்பகல் வரை முட்டுக்கட்டை அகற்றப்படவில்லை.

அலுவலகங்கள் செல்வோரும் அந்த வழியே சென்று கொண்டிருந்தோரும் தலைமைச் செயலக வாயிலுக்குள்ளும், வெளியேயும் மறியல்காரர்கள் நின்று கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டு நின்றனர். சில தொண்டர்கள் கட்டடத்தினிடமிருந்து நன்கொடை வசூலித்தனர்.

நேரடி நடவடிக்கையின் முதல் நாளான இன்று அமைதியாகக் கழிந்தது.

மாலை 5-மணிக்கு தலைமைச் செயலகக் கட்டிடத்திலிருந்து தொண்டர்கள் திரும்பினர்; பின்னர் மலைவாசிகளின் பாடல்களைப் பாடிக்கொண்டு ஊர்வலம் சென்றனர்.

காயங்களை ஆற்றுவதற்குச் சர்க்கரை பயன்படுகிறது

மருத்துவர் கண்டுபிடிப்பு

தைபே, செப். 11—

காயங்களைக் குணப்படுத்த ஒரு புதிய முறையை தைவான் மருத்துவர் ஒருவர் அறிவித்துள்ளார்.

தூய்மையாக்கப்பட்ட சர்க்கரையைப் பயன்படுத்திக் காயங்களைக் குணப்படுத்த முடியும் என்று அறிக்கை ஒன்றில் அவர் தெரிவித்திருக்கிறார், இதற்கு ஆதரவாக 40 ஆதாரங்களை அவர் குறிப்பிட்டுள்ளார்.

"தோல் வளர்ச்சிக்கும், இரத்த ஓட்டத்துக்கும் சர்க்கரை உதவுவதால் காயங்களைக் குணப்படுத்துவதில் அது பலன் அளிக்கிறது" என்றார் அவர்.

இரஷ்யா திருப்தி?

பிரேக், செப். 9—

மாஸ்கோ பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட உடன்பாட்டுக்குப் பின்னர் செக்கோஸ்லோவேகியாவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்துத் தாங்கள் மனநிறைவு கொண்டுள்ளதாக இரஷ்யத் தலைவர்கள் செக். தலைவர்களிடம் தெரிவித்ததாக இங்குள்ள விவரமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

16,000 இந்தியர் வௌியேற்றம்

நைரோபி, செப். 11—

"இவ்வாண்டு சனவரித் திங்களிலிருந்து இதுவரையில் கினியாவிலிருந்து 16,000 இந்தியர்கள் வௌியேறியிருக்கிறார்கள்" என்று கென்யா குடியரசுத் தலைவர், நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

"அவர்களில் பெரும்பாலோர் பிரிட்டனுக்குச் சென்றிருக்கிறார்கள்; சிலர் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் போனார்கள்" என்றும் அவர் சொன்னார்.

மக்கள் நிலையை மொரார்ஜியும் உணருகிறாரா?

சிறிய கார் உற்பத்திக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதன் நோக்கம் என்ன?

பெங்களூர், செப் 11—

"எல்லா மக்களுக்கும் வயிறார உண்ணுவதற்கே வசதி செய்து கொடுக்க முடியாத நிலைமையில் சிறிய மோட்டார் உற்பத்திக்கு இப்போது என்ன அவசரம் வந்துவிட்டது"

என்று துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய், காங்கிரசு ஊழியர்கள் கூட்டமொன்றில் கேட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"நமக்கு எப்போது வசதி கிடைக்கிறதோ அப்போதுதான் அந்தத் திட்டம் வரும்; மக்களுக்கு முதலில் வேண்டியது எது?—உண்ண உணவா? குடியிருக்க வீடா? அல்லது சிறிய மோட்டாரா?

சிறு மோட்டார் உற்பத்தி செய்வதால் இந்த நாட்டில் எவ்வளவு பேர் அதை வாங்க முடியும்?

சிறு மோட்டார் உற்பத்திக்காக ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இதைப்பற்றி இறுதியாக ஒரு முடிவு செய்வதற்கு முன்பு அதற்கு எவ்வளவு அந்நியச் செலாவணி வேண்டியிருக்கும்—என்ன செலவு ஆகும் என்பதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

சிறிய மோட்டார் தொழிற்சாலையைத் தங்கள் பகுதிகளில்தான் ஏற்படுத்த வேண்டுமென்று பல மாநிலங்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றன; ஆனால், இறுதியாக அது எந்த மாநிலத்திற்குப் போகும் என்று எனக்குத் தெரியாது."

உலகின் எதிர்காலம் பற்றி அச்சம்!

ரோம், செப். 10—

உலகத்தின் எதிர்காலம் குறித்துப் போப்பாண்டவர் பெரிதும் கவலைப்படுவதாகத் தகவல் ஒன்று கூறுகிறது.

"பல்வேறு நாடுகளிடையே யுள்ள தகராறுகள் அமைதியாகத் தீராமல் வன்செயல்களே தலைதூக்கி நிற்பதைப் பார்க்கும்போது, இன்னும் பல நெருக்கடியான கட்டங்களைத் தாண்ட வேண்டியிருக்கும்" என்று தோன்றுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நிபந்தனையின்றி பணிய வேண்டுமாம்

செக்கோஸ்லோவேகியாவுக்கு இரஷ்யா எச்சரிக்கை!

"இரஷ்யக் கட்டளைக்கு நிபந்தனையின்றி உடனடியாகக் கீழ்ப்படிய மறுத்தால், செக்கோஸ்லோவேகியா நாட்டையே இரஷ்யப் படை வசப்படுத்திக் கொள்ளும்"

என்று, செக் நாட்டு ஆட்சியாளர்கட்கு இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக ஒரு தகவல் கூறுகிறது.

பசி-பிணி-அறியாமை போக்குவதே அரசின் இலட்சியம்

கல்விக்கு அடுத்தபடியாக மருத்துவத்துக்கு செலவாகிறது

இந்த நற்பணிக்குச் செல்வர்கள் தாராளமாக உதவ வேண்டும்

வேலூர் மருத்துவ விடுதிப் பொன் விழாவில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் வேண்டுகோள்

வேலூர், செப். 10—

"கல்விக்கும், மருத்துவத்துக்கும் தமிழக அரசு அதிகப் பணம் செலவழிக்கிறது; பசி, பிணி, அறியாமை ஆகியவற்றைப் போக்குவதுதான் அரசின் இலட்சியமாகும்.

"வௌிநாடுகளில் தொத்து நோய்பற்றி ஆராய்ச்சி நடத்த வேண்டுமானால், அதற்கான கிருமிகளை இந்தியாவிலிருந்துதான் கொண்டு செல்கிறார்கள்; அந்த அளவுக்கு இங்கு தொத்து நோய்கள் பரவியிருக்கின்றன.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாகும்; ஒருவனுக்குக் கோடி ரூபாய் பணம் இருந்தாலும், வயிற்று வலி இருந்தால் அவனால் நிம்மதியாக வாழமுடியாது.

"மருத்துவத்தைத் தொழிலாக மட்டும் டாக்டர்கள் கருதாமல், தொண்டாகவும் கருதவேண்டும்.

"டாக்டர்கள், நோயாளியின் 'மடி'யை மட்டும் பார்க்காமல் உடலைப் பார்த்து மருந்து தரவேண்டும்.

"உடலைப் பார்க்காமல் சீட்டுக் கொடுப்பது—சீட்டைப் பார்க்காமல் மருந்து கொடுப்பது—இவையெல்லாம் முன்பு இருந்தன; இப்போது இந்த நிலைமை ஒழிந்துவிட்டது."

இவ்வாறு கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், வேலூர் நகரிலுள்ள அரசாங்க பெண்டலண்டு மருத்துவமனையின் வைர விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் சுட்டிக் காட்டித் தெரிவித்தார். அவரது உரையாவது:—

"நோய் வந்தபிறகு சிகிச்சை அளிப்பதைவிட, நோய் வராமல் தடுப்பதுபற்றி மக்களுக்கு எடுத்துரைப்பதில் மருத்துவர்கள் கவனம் செலுத்தவேண்டும்.

மாநில அரசின் வருமானத்தில் 24 சதவிகிதம் கல்விக்காகச் செலவிடப்படுகிறது; அப்படியிருந்தும், 40 சதவிகிதம்பேர் தான் கல்வியறிவு பெற்றிருக்கின்றனர்.

கல்விக்கு அடுத்தபடியாக மருத்துவத் துறைக்கு மாநில அரசு முக்கியத்துவம் அளிக்கிறது.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் முக்கியத்துவத்தை மக்கள் உணரவேண்டும்.

ஒரு குழந்தை பிறந்து 50 ஆண்டுக்காலம் உயிர் வாழும்வரை, தலைக்கு சுமார் ரூ. 2.5 இலட்சம் வீதம் அரசுக்குச் செலவாகிறது."

குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்பவர்களுக்கு ரூ. 30 உதவிப் பணம் கொடுப்பதுபற்றிக் குறிப்பிட்டு, இந்த 30 ரூபாய், 2.5 இலட்சம் ரூபாய் செலவை எவ்வாறு தவிர்க்க உதவுகிறது என்று அவர் விளக்கினார்.

நோய்களை ஒழிக்கும் பணியில் மருத்துவர்கள் ஈடுபட்டு, நலமிக்க சமூகத்தைக் கட்டி வளர்க்க வேண்டுமென்று நாட்டு மக்கள் எதிர்பார்ப்பதாக அமைச்சர் கூறினார்.

மருத்துவ நிறுவனங்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் தாராளமாக உதவுமாறு அவர் செல்வர்களைக் கேட்டுக்கொண்டார்.

மருத்துவர்களின் அரிய சாதனை!

பம்பாய், செப். 10—

விபத்தில் சிக்கிய ஒருவருடைய கை முழுமையாகத் துண்டிக்கப்பட்டுவிட்டது.

துண்டிக்கப்பட்ட கரத்தை மருத்துவர்கள் மறுபடியும் உடலோடு இணைத்து ஒட்ட வைத்துவிட்டார்கள்.

பம்பாய் மாநகராட்சியின் நாயர் மருத்துவமனையில் இந்த அரிய சாதனை நடந்தது.

விபத்தில் அடிபட்டவரையும், துண்டிக்கப்பட்ட அவருடைய கரத்தையும் போலீசார் மருத்துவமனைக்குக் கொண்டுவந்தார்கள்.

துண்டிக்கப்பட்ட கரத்தை உயிருள்ளதாக வைத்திருந்து, அதை அடிபட்டவரின் உடலில் மீண்டும் பொருத்துவதற்குச் சுமார் ஒன்பது மணி நேரத்திற்குமேல் எல்லா மருத்துவர்களும், நர்சுகளும் சேர்ந்து போராடினர்கள்.

"நோயாளியின் உடல்நிலை முன்னேற்றம் ஊக்கமளிப்பதாக இருக்கிறது" என்று மருத்துவ விடுதிச் செய்தி கூறியது.

உடலின் ஒரு பாகத்தை மீண்டும் உடலோடு பொருத்தும் சிகிச்சை முறையை ஒரு திரைப் படத்தின்மூலம் இந்த மருத்துவமனை மருத்துவர்கள் அறிந்துகொண்டார்கள்.

சிறிது காலத்திற்குமுன்பு இங்கு வந்திருந்த ஜப்பானிய அறுவைச் சிகிச்சை நிபுணர் இந்தத் திரைப் படத்தைக் காட்டினர்.

உடலின் ஒரு பாகத்தை மீண்டும் உடலோடு பொருத்தும் சிகிச்சை நடைபெற்றது; இந்தியாவிலேயே முதலாவதாக இதுதான் என்று நம்பப்படுகிறது.

தலைவர்களின் நேரடி நடவடிக்கை

தலைமைச் செயலகத்தைச் சூழ்ந்து நின்று மறியல்

அரசு ஊழியர்கள் உள்ளே நுழைய இயலவில்லை

ஷில்லாங், செப் 10—

அசாம் மாநிலத்திலுள்ள மலைப் பகுதிகளில் அசாம் அரசு செயல்படுவதை நிலைநிறுத்தச் செய்வதற்காக அனைத்துக் கட்சி மலைத் தலைவர்கள் மாநாடு இன்று அமைதியான முறையில் நேரடி நடவடிக்கையைத் துவங்கினர்.

கட்சியின் பொதுச்செயலாளர் ஸ்டான்லி நிகலஸ் ராய் தலைமையில் 300 தொண்டர்கள் இன்று காலை மாநில அரசின் தலைமைச் செயலகக் கட்டிடத்தை எல்லாப் பக்கங்களிலிருந்தும் சூழ்ந்துகொண்டு நின்றனர்; இதன்மூலம் 1,500 அரசு ஊழியர்கள் கட்டிடத்திற்குள் போக விடாமல் தடை செய்தனர்.

இன்று காலை 9-மணிக்கு அலுவலகங்கள் திறப்பதற்கு ஒரு மணி

பெரியாறு பாசனம்

உழவர் பெருமக்களுக்கு முக்கியக் குறிப்பு

சென்னை, செப். 11—

வைகை நீர்த்தேக்கத் திட்டத்தைச் சேர்ந்த திருமங்கலம் தலைக் கால்வாயில் செப்டம்பர் 12 முதல் 1969 சனவரி 11-வரை பாசனத்துக்குத் தண்ணீர்விட தமிழக அரசு தீர்மானித்திருக்கிறது.

இதனால், நேர்முக—மறைமுக ஆயக்கட்டு முழுவதும் பாசன வசதி பெறும்.

உழவர் பெருமக்கள், குறுகிய காலப் பயிர் மட்டுமே பயிரிட வேண்டும்.

எக்காரணத்தை முன்னிட்டும், 1969 சனவரி 11-ம் நாளுக்குமேல் தண்ணீர் விடப்படமாட்டாது.

அடுக்கு மாளிகைகளை எங்கே கட்டலாம்?

நில நடுக்கத்திலிருந்து தப்புவிப்பது எப்படி?

பிரிட்டிஷ் கட்டிடக் கலை நிபுணர்கள் ஆய்வு

அண்மையில் ஈரானில் பெரும் நில நடுக்கம் ஏற்பட்டு ஆயிரக் கணக்கான உயிர்கள் மாண்டதும், கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருள்களும் வீடுகளும் சேதமடைந்ததும் உலகையே உலக்கிய செய்தியாகும்.

குறைந்த இடத்தில் அதிக மக்களைக் குடியமர்த்தவோ, அல்லது அதிக மக்கள் பணிபுரியும் அலுவலகங்கள் நடைபெறவோ ஒரே வழிதான் உண்டு; அதுதான் அடுக்கு அடுக்காக மேலே போய்க் கொண்டே இருப்பது! இருபது—முப்பது மாடிக் கட்டிடங்கள் கட்டுவது இப்போதெல்லாம் உலகெங்கும் மிகச் சாதாரணமாகிவிட்டது!

கட்டிடங்களின் உயரம் அதிகமாக அதிகமாக, அதனைப் பார்த்து வியக்கிறோம்! அதே நேரத்தில், பிறிதோர் இடத்தில் நில அதிர்ச்சியையும் நினைக்கும்போது நெஞ்சம் கலங்கும்!

அண்மையில் ஏற்பட்ட நில அதிர்ச்சிகளும், அதன் விளைவுகளும் கேட்போர் நெஞ்சை உருக்கின!

இதற்கு ஒரு முடிவே இல்லையா? ஒன்று— நில அதிர்ச்சியே ஏற்படாமல் 'தடை' செய்ய வேண்டும்; அல்லது, நில அதிர்ச்சி ஏற்பட்டாலும் அதனால் பாதிக்கப்படாத கட்டிடங்களைக் கட்டவேண்டும்; இதில், முன்னது முடியாதது; அடுத்தது, 'ஆகக்கூடியது' என்று பிரிட்டிஷ் கட்டிடக் கலை வல்லுநர்கள் துணிந்து கூறுகிறார்கள்.

புதிய முறை

நில அதிர்ச்சி ஏற்பட்ட இடத்திற்குச் சென்று -- பூமியைக் குடையும இயந்திரங்களைக் கொண்டு மிகுந்த ஆழம் தோண்டிக் குழாய் இறக்குகிறார்கள்; ஆங்காங்கு அழுத்தம் நிறைந்த வேட்டு வைத்துப் பரிசோதிக்கிறார்கள்; இயற்கையான அதிர்ச்சியாலும், வேட்டுப் போன்ற செயற்கையான அதிர்ச்சியாலும் பூமி எப்படிப் பாதிக்கப்படுகிறது என்று கண்டறிகிறார்கள்; பூமியின் கீழே செல்லச் செல்ல விளைவுகளில் ஏற்படும் மாறுதல்கள் என்ன என்பதையும் குறித்துக் கொள்கிறார்கள்; அதாவது, கீழே போகப் போக அதிர்ச்சியின் அழுத்தம் -- வேகம் எவ்வளவு என்றும், ஆழத்திற்கேற்ப இந்த அழுத்தம்—வேகம் இவற்றில் ஏற்படும் மாறுதல்கள் என்ன என்றும் அறிந்துகொள்கிறார்கள்.

அதிர்ச்சியின் அழுத்தம் -- வேகம் இவற்றைப் பொறுத்தே அந்த இடங்களில் அமையும் கட்டிடங்களின் தன்மை அமைகிறது. பல கட்டங்களிலும் உள்ள அழுத்தம் -- வேகம் இவற்றைக் கணக்கெடுத்துக்கொண்டு, 'எந்த இடத்தில் இவை மிகவும் குறைவாக இருக்கின்றன' என்று அறிவார்கள். அந்த இடம்வரை அடித்தளம் அமைத்து எழுப்பும் கட்டிடங்கள், அதிர்ச்சியால் பாதிக்கப்படமாட்டா; அல்லது, 'குறைந்த அழுத்தத்தைத் தாங்கும் அளவுக்கு உறுதியான கட்டிடங்கள் அமைத்தால் அதிர்ச்சி ஏற்பட்டாலும் தப்பிவிடும் என்பது' அவர்களின் கருத்து. இவர்களின் இந்த ஆராய்ச்சிக்கு, 'கம்ப்யூட்டர்கள்' பெருமளவு உதவியாக இருக்கின்றன.

தங்களின் திட்டப்படி ஒரு 20 அடுக்கு மாளிகையை ஈரானில் கட்டப்போகிறார்கள் -- இந்தப் பொறியியல் வல்லுநர்கள்!

புதிய கட்டிடத்தின் தத்துவம் பற்றிய விவரங்களையும், அமைப்பை விளக்கும் இரு 'மாடல்'களையும் ஈரான் மன்னருக்கு அனுப்பியுள்ளனர்; இதில் ஒன்றை ஷா தேர்ந்தெடுத்துள்ளார்; பிற ஒப்பந்தங்கள் முடிந்ததும், கட்டிட வேலை தொடங்கும்; 'கட்டி முடிக்க மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் ஆகும்' என்று அவர்கள் கூறினார்கள்.

கல்வியின் வாடையே படாத முதியோர்!

உலகில் 100 கோடி பேர்!

வறுமை, பிணி, ஏழ்மை இவற்றைப் போலவே — அல்லது இவற்றையும்விட — கொடியது அறியாமை; கல்வியறிவில்லாத மக்கள் தாங்களும் முன்னேறுவதில்லை -- நாட்டு முன்னேற்றத்திற்கும் தடையாக இருக்கிறார்கள்! ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் அந்நாட்டு மக்களின் அறிவாற்றலைப் பொருத்தே அமைகிறது!

பொருளாதாரத்திலும், செல்வ நிலையிலும் நாடுகளுக்கிடையே இருந்துவரும் ஏற்றத்தாழ்வு, கல்வித் துறையிலும் இருந்து வருகிறது. இல்லையெனில், தனது இளைஞர்களில் 30 சதவிகிதத்தினர் உயர்கல்வி--பட்டப் படிப்பு -- படித்து வருகிறார்கள் என்று ஒருசில நாடுகள் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில், வேறு பல நாடுகளில் வயது வந்தோரில் 3 சதவிகிதத்தினரே எழுதப் படிக்கத் தெரிந்த நிலை இருக்குமா? இரண்டிற்கும் இடையிலான பள்ளம் நீக்கப்பட வேண்டும்—உடனே முயற்சியாக பாலம் மூலமாவது இருவகை நாடுகளும் இணைக்கப்பட வேண்டும்.

கல்வியின் அவசியம் உலகின் அத்தனை நாடுகளிலும் உணரப்பட்டுள்ள இந்தக் காலத்தில்— மதிய உணவு, இலவசப் பாட நூல்கள், இலவசக் கல்வி போன்ற வசதிகளைச் சிறுவர்களுக்கும், முதியோர் கல்வி வசதியை முதியோருக்குப் அளித்து கல்வியறிவைப் பெருக்கப் பல நடவடிக்கைகள் எல்லா நாடுகளிலும் எடுக்கப்பட்டு வரும் இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுத்து வாசனையற்றோரின் எண்ணிக்கை நூறு கோடியாகவுள்ளது.

உலகெங்கும் உள்ள எழுதப் படிக்கத் தெரியாத முதியோர் எண்ணிக்கை மட்டும் இது!

"வயது வந்தவர்களில் ஐவரில் இருவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது" என்ற நிலை இன்று இருக்கிறது. அவர்களைப்பற்றி அவர்கள் மொழியிலேயே எழுதிக் கொடுத்தாலும், முன்னும் பின்னும் திருப்பி -- மேலும் கீழும் பார்த்து விட்டுத் திருப்பித் தந்துவிடுவார்கள்!

'இந்த நிலை மாற வேண்டும்' என்ற நோக்கத்தோடு, ஐ.நா -வின் கல்வி — விஞ்ஞான — கலாசார — நிறுவனம் ('யுனெஸ்கோ') பல முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது; ஆண்டுதோறும் செப்டம்பர் 8-ம் நாளை 'சர்வதேச கல்வி தின'மாக அனைத்து நாடுகளும் அனுசரிக்க வேண்டும் என்பது அதன் முடிவு

மாண்டவர் மீண்டார்!

மருத்துவர்கள் சாதனை

கொழும்பு, செப். 10—

பாம்பு கடித்து உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த ஒருவரை, கொழும்பு டாக்டர்கள் ஒரு புதிய முறையைக் கையாண்டு பிழைக்க வைத்திருக்கிறார்கள்.

பாம்புக் கடிச் சிகிச்சைத் துறையில் ஒரு புதிய 'சகாப்த'த்தை அவர்கள் தோற்றுவித்திருப்பதாகக் கூறலாம்.

பாம்புக் கடியால் நஞ்சாகிவிட்டுள்ள இரத்தம் முழுவதையும் வடித்துவிட்டு, முற்றிலும் புது இரத்தம் ஏற்றுவதே இந்த முறை.

நிபுணர்கள் கைவிட்டுவிட்ட நிலையில், ஓர் இளைஞர் கொழும்பு மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டார்; அப்போது அந்த இளைஞரின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது; மூச்சு நின்றுவிடும் நிலைமையில் இருந்தது; உணர்விழந்துவிட்டார்; சிறுநீர் கூடக் கருப்பாக வந்துகொண்டிருந்தது.

டாக்டர் ஆலிவர் பியர்ஸ் தலைமையில் டாக்டர் குழு ஒன்று இந்தப் புதிய முறையைக் கையாள முன்வந்தது; பாம்பு கடித்த இளைஞரின் இடது கையில் ஒரு ரப்பர் குழாயைப் பொருத்தி, அதன் வழியாக அவரது உடலிலிருந்த இரத்தம் வெளியேற்றப்பட்டது.

அதேநேரத்தில், வலது கையில் ஒரு ரப்பர் குழாயைப் பொருத்தி புது இரத்தம் செலுத்தப்பட்டது; உடலிலிருந்து பழைய இரத்தம் முழுவதும் வெளியேற்றப்பட்ட அதே நேரத்தில், அந்த அளவுக்குப் புதிய இரத்தம் செலுத்தப்பட்டது நிபுணர்களால் கைவிடப்பட்ட இந்த இளைஞர் கடைசியில் பிழைத்துவிட்டார்.

உடலிலுள்ள இரத்தத்தை வெளியேற்றிப் புதிய இரத்தம் செலுத்துவதென்பது ஒரு புதுமையல்ல; ஆனால், பாம்புக் கடிக்கு இந்த முறையை யாரும் கையாண்டதாக இதுவரையில் மருத்துவ வரலாற்றில் கேள்விப்பட்டதில்லை.

செயற்கை முறையில் பிள்ளைப் பேறு!

குழந்தைப் பேறில்லாத பெண்மணிகளுக்கு செயற்கை முறை மூலம் பிள்ளை பிறக்கச் செய்வதற்கான வழிவகைகளை ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் உள்ள சில மருத்துவ நிபுணர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதுவரை மேற்கு ஜெர்மனியில் 178 பெண்களுக்கு செயற்கை முறை மூலம் குழந்தை பிறக்க ஏற்பாடு செய்யப்பட்டது; இவர்களின் 17 பேர் கருவுற்றனர்.

ஆனால், அந்நியர் ஒருவரின் உயிர்த் தாதுவை தானமாகப் பெற்றுச் செயற்கை முறை மூலம் குழந்தை பிறக்கச் செய்வது முறைகேடானது என்றே பெரும்பாலானவர்களால் கருதப்பட்டு வருகிறது.

கணவனின் தாதுவையே செயற்கை முறை மூலம் மனைவியின் உடலில் புகுத்தி கருவுறச் செய்வதுகூட சரியல்ல என்றே டலர் எண்ணுகின்றனர்.

காங்கிரசு ஊழியர் 'குட்டி'க் காட்டினார்

பழமொழி ஒன்றைக் கூறி சமாளித்தார் மொரார்ஜி!

பெங்களூர், செப். 11—

"நாட்டில் சில மாநிலங்கள் வளமாக இருக்கின்றன; சில மாநிலங்கள் ஏழ்மையாக இருக்கின்றன; இந்த ஏற்றத் தாழ்வுகளைச் சீர்படுத்த வேண்டும்"

என்று, காங்கிரசு ஊழியர் ஒருவர் மொரார்ஜி தேசாயிடம் கூறினார்.

"முதலில் உன் வியாதியைக் குணப்படுத்திக்கொண்டு, பிறகு மற்றவர்கட்கு மருத்துவம் செய்யப் புறப்படலாம்" என்ற பழமொழியை தேசாய் அவருக்குச் சொல்லிவிட்டு, மேலும் அவர் கூறியிருப்பதாவது:—

"மாநிலங்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகள் ஒருபுறமிருக்கட்டும்; ஒரு மாநிலத்திற்குள்ளாகவே சில பகுதிகள் வளமாக இருக்கின்றன; சில பகுதிகள் வறட்சியால் பீடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஏற்றத் தாழ்வுகள் அகற்றப்பட்டுவிட்டனவா? நீங்கள் அதைத் திருத்தாமலிருக்கும்போது, மத்திய அரசைப் பற்றிக் குறைகூற உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? ஏற்றத் தாழ்வுகளைச் சமப்படுத்துவதற்குச் சீரான முறைகளைக் கையாள வேண்டும்; உள்ளதை எல்லோரும் பகிர்ந்து கொள்ளும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் ஏற்றத் தாழ்வுகள் அப்படியே தானிருக்கும்."

அன்பு சொரியும் 'அன்னை'யாக அதிகாரி!

அவர் சொல்லைத் தட்டாத கைதிகள்!

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசைச் சேர்ந்த மேற்கு பெர்லின் நகரில் உள்ள சிறைச்சாலை, உலகில் இதுவரை வேறு எங்குமே இல்லாத ஒரு புதுமையைப் பெற்று விளங்குகிறது!

அது என்னவென்றால், ஆண்கள் சிறைச்சாலையான அதன் தலைமை அதிகாரியோ ஒரு பெண்மணி!

ஆண் கைதிகளைக் கொண்ட சிறைச்சாலைக்கு அதிகாரியாக ஒரு பெண் நியமிக்கப்பட்டிருப்பது உலகத்திலேயே இதுதான் முதல் தடவை!

பரிவும் பாசமும், இளகிய நெஞ்சும், மன்னிக்கும் மனப்பான்மையும் பெண்களுக்கே உரித்தான இயல்புகள்!

மேற்கு பெர்லின் ஆண்கள் சிறைச்சாலையின் அதிகாரியான 41 வயது பெண்மணி எலிசபெத் ஹேரிடம் இந்த இயல்புகள் அனைத்தும் சற்றுக் கூடுதலாகவே அமைந்துள்ளனவாம்!

அவர் இன்னும் திருமணம் புரிந்துகொள்ளவில்லை; ஆனால், தமது பொறுப்பில் உள்ள கைதிகளைத் தம்முடைய குழந்தைகளாகவே பாவித்து அவர்களிடம் தாய்மை உணர்ச்சியுடன் நடந்து கொள்கிறார் அவர்!

அதிகாரிக்கு உரித்தான கண்டிப்பும், கடுமையும் ஆர்ப்பாட்ட அதிகாரங்களும் இன்றி பரிவோடும் கலகலப்பாகவும் பேசிப் பழகும் அவரைக் கைதிகள், 'அம்மா' என்றே அழைக்கிறார்கள்!

சிறைச்சாலையில் கைதியாக அடைபட்டுக்கிடக்கும் கைதி எவரும் விரும்பினால், அவரைத் தனியே சந்தித்துப் பேசமுடியும்; தனக்குள்ள குறைகளையெல்லாம் அவன், அவரிடம் தாராளமாகவும் தயக்கமின்றியும் எடுத்துக் கூறலாம். ஒரு கைதி தம்மிடம் தனிமையில் பேச வரும்போது, ஒரு காவலாளியைக்கூட அருகில் இருக்க அனுமதிப்பதில்லை எலிசபெத்!

தமது அதிகாரத்துக்கு உட்பட்ட பல சலுகைகளையும் கைதிகளுக்கு அவர் அளித்து வருகிறார்! குறுகிய காலத்துக்கு சிறைச்சாலையை விட்டு வெளியே சென்று திரும்பவும் அவர் உடனடியாக கைதிகளுக்கு அனுமதி கொடுக்கிறார்! சிறைக்கு வெளியே அவர்கள் செல்லவிருக்கும் இடம் எது என்று வற்புறுத்திக் கேட்பதும் இல்லை! அப்படியும் இதுவரையில் எந்தக் கைதியும், இந்தச் சலுகையைப் பயன்படுத்திக்கொண்டு தப்பி ஓடவில்லையென்றால் அதற்குக் காரணம், எலிசபெத், 'அன்பு' என்னும் விலங்கால் அவனைப் பிணைத்து விட்டிருப்பதுதான்!

எலிசபெத் ஹேர், சட்டமும் சமூகவியலும் படித்துத் தேறியவர்; சிறைச்சாலை அதிகாரியாகப் பணியாற்றும் பொறுப்பை அவராக விரும்பியே ஏற்றுக் கொண்டார்; உற்றார் உறவினரைப் பிரிந்து வாழும் கைதிகளுக்கு ஆறுதல் அளிக்கும் மகத்தான சேவையாக தமது பணியைக் கருதுகிறார் அவர்!

திருத்துறைப்பூண்டி நெடுஞ்செழியன் மன்றம்

திருத்துறைப்பூண்டி நாவலர் நெடுஞ்செழியன் மன்ற உறுப்பினர்கள் கூட்டம் 3—9—68 அன்று அ. முகம்மது யூசுப் தலைமையில நடைபெற்றது; அவ்வமயம் கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

அவைத் தலைவர்: எம். இராசகோபால்; செயலாளர்: சி. செயராமன்; துணைச் செயலாளர்: எஸ். கணேசன்; பொருளாளர்: கோ. காசிநாதன்; மற்றும் ஒன்பது பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் 60-ம் ஆண்டு பிறந்த நாளையொட்டி

'நம் நாடு' சிறப்பு மலர்

14--9--68 அன்று வெளிவரும்

★ குறைந்த விலையில்---

★ சிறந்த முறையில்---

தயாராகிறது!

★

விலை 50 காசு

'நம் நாடு' — இராயபுரம் — சென்னை - 13

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களால் தாங்கிக்கொள்ள முடிய வில்லை!

நெஞ்சம் நெக்குருகி நிற்கின்றனர்! கண் களால் நீர் கசிந்தபடி தேம்புகிறனர்!

'ஒரு சிறு துரும்பு அவர்மீது படுவதால் ஏற் படும் உடல் துன்பத்தினையும் எங்களால் தாங்க முடியாது — அனுமதிக்க முடியாது' என்ற தமிழ் நெஞ்சங்களின் உறுதியைத்தான், விமான நிலை யம் வரையில் — வழியெல்லாம் கூடி நின்ற தமிழர் கூட்டம் அறிவுறுத்தியது!

''உடல் நலிவில் பங்குகொள்ளலாம் என்றிருந் தால், கோடிக்கணக்கில் நாங்கள் இருக் கிறோம்; ஆனால், அவர் துன்பம் மட்டும் அவன் றால் போதும்'' என்பதைக் கூறாமல் கூறி நின் றனர் — வழியனுப்ப வழியெல்லாம் நின்றிருந் தவர்கள்!

'சிகிச்சை முடிந்து திரும்ப இரண்டு மாத மாகுமாமே' என, காலத்தை எடைபோட்டே கழகத் தோழர்கள், விமானக்கூடத்தில் காற்றுப் புகவும் இடமில்லாமல் நிறைந்திருந்தனர்!

விமானத்துக்குச் சற்று அருகில் அண்ணாவின் கார் வந்து நிற்கிறது; அலுவலர், உயர் அதி காரிகள், உறவினர் — உற்றவர்கள், கழக முன் னணியினர், மற்ற கட்சிப் பெரியவர்கள் — இத்துணை பேர்களுக்குமிடையே தந்தை பெரி யார் இருப்பதைக் கண்டுவிடுகிறார் அண்ணா — நின்றுவிடுகிறது கார் — இறங்க முயலுகிறார் அண்ணா — 'வேண்டாம்; இறங்காதீர்கள்' என பதைபதைத்துக் கரம்கூப்பி வேண்டுகிறார் பெரியார்!

சற்றுத் தள்ளிச் சென்று கார் நிற்கிறது; காரி லிருந்து நாற்காலியில் அமர்ந்தபடி விமானத் தினுள் அழைத்துச் செல்ல ஏற்பாடு.

''நடக்கமுடியாத அளவுக்கா அண்ணாவுக்கு உடல் நலிவு?'' எனத் தோழர்களின் இதயம் துணுக்குற்றாலும் — என்ன காரணத்தினால் தானோ என்னவோ — அனைவரும் வியக்க நடந்தே சென்று விமானத்தில் ஏறுகிறார் அண்ணா!

காத்திருப்போர் கண்களில் இப்போது நீர்த் திவலைகள்! பார்வை சரியாகத் தெரியவில்லை! எனவே இதயங்கள் பார்க்கின்றன!

உடன் செல்வோர் ஏறி அமர்ந்த பின், காத்து நின்ற விமானம் — முப்பது நிமிட நேரம் தாம தத்துடன் — சரியாக 2-40-க்குப் புறப்படுகிறது!

விமானம் தரையில் ஓடிய திசையெல்லாம் நிலையத்திலிருந்தவர்களின் தலைகளும் திரும்பு கின்றன!

விண்ணை நோக்கிப் பறப்பதற்காகச் சக்கரங் கள் மண்ணினின்று விடுபடுகின்றன!

அனைவரது பார்வையும் இப்போது விண்ணை நோக்குகின்றன!

இப்படித்தான் இரண்டு திங்கள் கழித்து மற்று மோர்முறை விண்ணைநோக்கி, அண்ணாவின் விமானத்தை வரவேற்க மீண்டும் ஓர்முறை கூடவிருக்கின்றனர் அவர்கள் அனைவரும்!

எனவே, இப்போதைக்குக் கலைந்து திரும்பியிருக்கின்றனர்!

நலத்துடன் வர நல்வாழ்த்து கூறியிருக்கின் றது நாடு!

வரவேற்று மகிழ வாழ்த்தி வழியனுப்பியிருக் கின்றன — கோடிக்கணக்கான இதயங்கள்!

— எஸ். ஆர்.

சென்னையில்

அண்ணா பிறந்த நாள் விழா

மாபெரும் ஊர்வலம் — மகத்தான ஏற்பாடு

மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் வேண்டுகோள்

சென்னை, செப். 11—

சென்னை மாவட்ட தி.மு.க. செயலாளர் நீலநாராயணன் அறிவிப்பதாவது:—

''தமிழக முதலமைச்சரும் நமது தானைத் தலைவருமான பேரறிஞர் அண்ணா அவர்களின் 60-வது பிறந்த நாள் விழாவினை முன் னிட்டு 22—9—68 பிற்பகல் 2 மணிக்கு இராயபுரம் 'அறி வக'த்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்படும்; ஊர்வலத்தில் மாண்புமிகு அமைச்சர்களும் முன்னணித் தலைவர்களும் கலந்துகொள்ளுகின்றனர்.

''அறிஞர் அண்ணாவின் உருவப்படம் தாங்கிய அலங்கரிக்கப் பட்ட யானை ஊர்வலத்தின் முன்னே வரும்; அடுத்து குதிரை - ஒட்டகம் ஆகியவற்றைத் தொடர்ந்து தாரை - தப்பட்டை, நையாண்டி மேளம் முதலான கிராமிய இசைக் குழுவினர் வருவர்; பொய்க்கால் குதிரை, புலி வேடம், கரக ஆட்டம், நாதசுரம் முதலிய நிகழ்ச்சிகளும் இடம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

''ஊர்வலத்தில் தமிழக அரசின் சாதனைகளைச் சித்தரித்துவரும் டிரக்குகள், கண்கவர் காட்சியாய் அமையவிருக்கின்றது.

''கருத்தும் கவர்ச்சியுமிக்க டிரக் வண்டிக்குப் பரிசளிக்கப்படும். பரிசு பெறும் வண்டியைத் தேர்ந்தெடுக்க முன்னாள் போலீசுத் துணை ஆணையாளர் திரு. வி. குழந்தைவேலு, பேராசிரியர் மா.கி. தசரதன், திருமதி புவனேசுவரி நடராசன், திருமதி வெற்றிச்செல்வி அன்பழகன் ஆகியோர் நீதிபதிகளாக நிய மிக்கப்பட்டுள்ளனர்; இவர்கள், மவுண்ட்ரோடு அண்ணா சிலை யருகில் அமைக்கப்படும் மேடையில் அமர்ந்து டிரக் வண்டி களைப் பார்வையிடவிருக்கின்றனர்.

''கிளைக் கழகச் செயல் வீரர்களே! துணை மன்றத் தோழர்களே! உங்கள் அமைப்பின் சார்பில் டிரக்குகள் தயாரா? பரிசு பெறும் அமைப்பு எது?

''கழகத் தோழர்களே! இன்றிலிருந்தே விரைந்து செயல்படுங் கள்! பரிசு பெறும் வாய்ப்பினைப் பெற முனைந்து நில்லுங்கள்!''

தமிழகக் காங்கிரசாரின் பிரார்த்தனை!

'சிகிச்சை பெற அமெரிக்கா செல்லும் தமிழக முதலமைச்சர் விரைவில் நலம்பெற்று சுகமே நாடு திரும்ப மற்றவர்களுடன் காங்கிரசு உறுப்பினர்களும் பிரார்த்திக்கிறார்கள்.

''திரு. அண்ணாதுரை அவர்கள், சிகிச்சைக்காக அயல் நாடு சென்றுள்ள நாட்களில், அவர் மனம் சஞ்சலப்படும்படியாகக் காங்கிரசார் ஏதும் சொல்லக் கூடாது என்று நான் வேண்டு கோள் விடுக்கிறேன்.

''முதலமைச்சர் நாடு திரும்பும் வரை, தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியைப் பொறுத்தமட்டில், அது எவ்விதக் கிளர்ச்சியிலோ ஆர்ப்பாட்டத்திலோ இறங் காது.''

—சி. சுப்பிரமணியம்

(செய்தியாளர் கூட்டத்தில்)

அண்ணாவின் மூன்று அம்சத் திட்டம்

செயல்படுத்துவதில் அதிகாரிகள் தீவிரம்

செங்கற்பட்டு, செப். 11—

முதலமைச்சர் அண்ணா அவர் கள் வெளியிட்ட மூன்று அம்சத் திட்டத்தின் கீழ் செங்கற்பட்டு மாவட்டத்தில் கிராம மக்களின் மக்களின் குறைகளைப் போக்க ரெவினியூ அதிகாரிகள், மாதத்தில் மூன்று நாட்களில் 201 கிராமங்க ளுக்குச் சென்று குறைகளைத் தீர்ப் பதில் ஈடுபடுவார்கள்.

இம்மாதம் மட்டும் 10, 11, 12 ஆகிய நாட்களில் நாள்தோறும் 67 கிராமங்கள் வீதம் சென்றனர்— செல்லுகின்றனர்.

இனி மாதா மாதம் 6, 7, 8 ஆகிய நாட்களில் செல்வார்கள்.

இந்தத் திட்டத்தினால், ஆண்டுக் கணக்காகத் தீர்க்கப்படாத பிரச்சி னைகள், உடனடியாகத் தீர்க்கப் படும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

திராவிட முன்னேற்ற க் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடு பவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு ... அச்சகத்தில் (24, ... தெரு, சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

நோயாளிகளும் எழுந்து வந்து

வாழ்த்துக் கூறிய காட்சி!

முதலமைச்சர் அண்ணா அவர் களை நேற்று சென்னை மக்கள் வழி யனுப்பி வைத்தது குறித்து 'மெயில்' ஆங்கில நாளிதழ் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளது:—

''அண்ணாதுரை அவர்கள் மருத் துவமனை தனி வார்டிலிருந்து தள்ளு வண்டியில் அமர்ந்த படி வெளியே புறப்பட்டபோது பல நூற்றுக்கணக்கானோர் கூப்பிய கரங்களுடன் வழி யனுப்பினர்.

உணர்ச்சியை அடக்க முடியாது பலர் கண்கலங்கி நின்றனர்!

வேறு சில தோழர்கள், 'அண்ணா வாழ்க' என்று குரலெழுப்பினர்!

மருத்துவமனையில் இவ்வாறு அண்ணாதுரை அவர்களை வழி யனுப்பியவர்களில் மிகப் பலர், அங்கு பல வார்டுகளில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள் ஆவர்; 'அண்ணாதுரை அவர்கள் நலத்துடன் திரும்பி வர வேண்டும்' என்ற தங்கள் விருப்பத்தையும் வேண்டுதலை யும் வெளிப்படுத்த இவர்கள், தங்கள் படுக்கைகளைவிட்டு வெளியேறி வந்தார்கள்!

முதலமைச்சர் நுங்கம்பாக்கத்தி லுள்ள தமது இல்லத்துக்குச் சென்றபோதும் — அங்கிருந்து விமான நிலையத்துக்குச் சென்றபோதும், பெருந்திர ளான மக்கள், ஆண்கள் — பெண்கள் — குழந்தைகள் — சாலையோரங்களில் மணிக் கணக்கில் கரங்கூப்பி நின் றிருந்தனர்; அவர்களால் மன உணர்ச்சியைக் கட்டுப் படுத்த இயலவில்லை; அவர் கள் கண்களிலிருந்து நீர் பெருகியது; அவர்கள், 'அண்ணாதுரை நீண்டநாள் வாழ' வாழ்த்தினர்; கடவுள் அவரை நமக்காகத் தந் தருளுவார்; தலைமை தாங்கி நம்மை இட்டுச் செல்ல அவர் விரைவில் திரும்பி வருவார்' என்று அந்த மக்கள் குர லெழுப்பினர்!''

செ. யூசுப் நிகழ்ச்சிகள்

செப். 15: திருத்துறைப்பூண்டி; 18: தோப்புத்துறை; 19: பாமணி; 30: ஆயக்காரன்புலம்.

எத்தியோப்பிய வானொலியில்

அறிஞர் அண்ணா

வாழ்க்கை வரலாற்று வில்லிசை நிகழ்ச்சி!

சென்னை, செப். 11—

அறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை, வில் லிசை நிகழ்ச்சியாக எத்தியோப் பிய வானொலி நிலையம் ஒலி பரப்ப ஏற்பாடு செய்துள்ளது.

12-9-68 வியாழக்கிழமை மாலை 7-30 மணிக்கு ஒலிபரப்பாகும் இந்நிகழ்ச்சியை, 19-வது மீட் டரில் கேட்கலாம்.

சென்னையிலுள்ள கிறிஸ்துவக் கலை — செய்தித் தொடர்பு நிலையம் ஏற்பாடு செய்திருக்கும் இந்த நிகழ்ச்சியை, கவிஞர் முருகுவண்ணன் எழுதி உரு வாக்கியுள்ளார்.

கலை நிகழ்ச்சி

ஆடலூர் தி. மு. க. சார்பில் 13—9—68 மாலை 7 மணிக்கு என். எஸ். கே. திடலில், மணி—சாமி குழுவினரின் 'ஆளுகின்றார் அண்ணா' என்னும் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

தெ. ஆ. மாவட்ட தி.மு.க. தேர்தல் நாள்

தெ. ஆ. மாவட்ட கழகத் தேர் தல் நடைபெறும் நாளாக 13—9—68 என்று, நேற்று (உள் ளூர்) 10-9-68 'நம் நாடு' இத ழில் வெளியிடப்பட்ட தேர்தல் நாள் மாற்றப்பட்டிருக்கிறது.

தெ. ஆ. மாவட்ட தி. மு. கழகத் தேர்தல் நடைபெறும் நாள், ஆணையாளர் பெயர், இடம் முதலிய விவரங்கள் பின்னர் உறுதி செய்து அறிவிக்கப் படும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

தோவாளை வட்ட தி.மு.க. தேர்தல்

ஒத்திவைப்பு

குமரி மாவட்டம் தோவாளை வட்ட தி மு. கழகத்தின் எல் லாப் பொறுப்புகளுக்குமான தேர்தல்கள் 7-9-68 அன்று முறைப்படி நடைபெறும் வகை யில் தலைமைக் கழகத்தால் ஏற் பாடு செய்யப்பட்டதை எதிர்த்து வி. சண்முகம், வி. கணபதி என்பவர்களால் கோர்ட்டில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், தோவாளை வட்டக் கழகத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு குமரி மாவட்டக் கழகத் தேர்த லுக்குப் பிறகு முறைப்படி நடத்துவதென முடிவுசெய்யப் பட்டிருக்கிறது.

தோவாளை வட்டக் கழகம் முறைப்படி அமையவில்லை என்பதால், குமரி மாவட்டத் தின் மற்ற வட்டங்களின்— அதாவது, அகத்தீசுவரம், விள வங்கோடு, கல்குளம், நாகர் கோவில் பெருநகரம் ஆகிய வற்றின் பிரதிநிதிகள் 13-9-68 மாவட்டக் கழகத் தேர்தலில் பங்குகொள்வர்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

தேவகி பாண்டியன்

சுற்றுப்பயணம்

செப். 15: சோஹூர்மட்டம் (உதகை); 16: மணவாளக் குறிச்சி; 17, 18: மதுரை மாவட் டம்; 19: இராசபாளையம்; 20: கிழவிகுளம்; 21: இராமேசுவரம்; 22: பாம்பன்; 23: மதுரை.

குமரி மாவட்ட தி.மு.க. தேர்தல்

ஆணையாளர்: எம். எஸ். அப்துல் காதர்

குமரி மாவட்டக் கழகத் தேர்தல் ஏற்கனவே அறிவிக்கப்பட் டுள்ளதற்கேற்ப, 13—9—68 காலை 10 மணிக்கு வடசேரி பயணிகள் விடுதியில் நடைபெறும்.

தலைமைக் கழகச் சார்பான ஆணையாளராகத் தோழர் எம். எஸ். அப்துல் காதர் அவர்கள் தேர்தலை நடத்திவைப்பார்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

குமரி விஜயா குழுவினரின்

'ஆளுகின்றார் அண்ணா'

கலை நிகழ்ச்சிகள்

செப். 13: சென்னை 41-வது வட் டம்; 14: பட்டிவீரன்பட்டி; 15: ஆலமரத்துப்பட்டி; 16: இராம நாதபுரம்; 17: இராசிபாளையம்; 18: தர்மபுரி; 19: சங்ககிரி; 20: திருவையாறு; 21: ஆவனத் தாங்கோட்டை; 22: விருதுநகர்; 23: ஒண்டிப்புதூர்; 24: கோவை; 25: இராமகிருட்டினபுரம்; 26: கோவை நகர்; 27: சிங்காநல் லூர்; 28: கோவை; 29: அருப் புக்கோட்டை; 30: சிவகாசி.

நிகழ்ச்சி ... விரும்புவோர் தொடர்புகொள்க:—

மு. வரதராசன், செயலாளர், தென்னகப் பல்கலைக் குழு, 325, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை-5.

கண்ணம்மா—தங்... சு

கலை நிகழ்ச்சிகள்

செப். 14: பொள்ளாச்சி; 15: கோவை 11-வது வட்டம்; 16: சமயநல்லூர்; 17: மோகனூர் (சேலம்); 18: திருச்செங்கோடு; 19: ஒட்டன்சத்திரம்; 20: லோயர் கேம்ப்; 21: கும்பகோணம்; 22: குடந்தை வட்டம்; 23: பேரா வூரணி; 24: தஞ்சாவூர்; 25: பேராவூரணி வட்டம்; 26: சட லூர்; 27: திருப்பாப்புலியூர்; 28: திண்டுக்கல் 27-வது வட்டம்; 29: திருச்சி (பீமநகர்); 30: பழனி.

திருமணங்கள்

சென்னை 5-வது வட்ட தி. மு. க. அவைத் தலைவர் தோழர் எம். பொன்னுசாமி மகள் செல்வி: தமிழரசிக்கும்—செல்வன்: கோபா லுக்கும் 11—9—68 காலை மதுரை—செல்லூர் அகிம்சாபுரம், 19 எண் ணுள்ள இல்லத்தில் திருமணம் நடைபெறும்.

★

கழகத் தோழர் எம். எஸ். கே. உலகநாதனின் மகள் செல்வி: கே. யூ. குணவதிக்கும்—செல்வன்: எம். துரைசாமிக்கும் 11—9—68 காலை, சென்னை—வண்ணை இராமா நுஜஐயர் தெரு, 16, எண்ணுள்ள இல்லத்தில் திரு. டி. பி. சுந்தரம் தலைமையில் திருமணம் நடை பெறும்.